உளவியல் நோக்கில் கலித்தொகை மகளிர்

முனைவர் பட்ட ஆய்விற்குரிய (Ph.d) முன்ஆய்வுச் சுருக்கம்

ஒப்படைப்பு

முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்)

வே.ரத்னா

பதிவு எண் : 20PHTMF003

ஆய்வு நெறியாளர்

முனைவர் மு.கவிதா. எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,

தமிழ்த்துறை

அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்

கோயம்புத்தூர் - 641043.

ஜீலை - 2024

உளவியல் நோக்கில் கலித்தொகை மகளிர்

முன்னுரை

உளவியல் என்பது மனிதனின் நடத்தை பற்றிய அறிவியல் துறையாகும். மனிதனின் நடத்தையை நிர்ணயிப்பதும் அவர்கள் உள்ளத்தில் புதைந்து கிடப்பனவற்றைப் புரிந்துகொள்வதுமே உளப்பகுப்பாய்வாகும். இலக்கியம் மனிதனின் வாழ்க்கை நிலைகளைப் பிரதிபலிக்கிறது. அது மனித மனத்தின் செயல்பாடுகளை வெளிப்படுத்துகிறது. ஒவ்வொரு படைப்புகளும் அவர்களின் அனுபவங்களின் வெளிப்பாடாகும். இந்நிலையில் இலக்கியமும் உளவியலும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாய் விளங்குகின்றன. சங்க இலக்கியத்தில் அகத்திணைப் பாடல்கள் அனைத்துமே உள்ளத்து உணர்வுகளின் மொழி வெளிப்பாடுகளாகும். சங்க காலத் தமிழ் மக்களுடைய வாழ்க்கை அகம், புறம் என்று இரண்டு பிரிவுகளாகப் பகுக்கப்பட்டிருக்கிறது. தலைவன் - தலைவி ஆகிய இருவரின் உறவே களவும், கற்பும் ஆகும். அவ்வகையில் காதலைப் பற்றிய செய்திகளை இலக்கிய நயத்துடன் கலித்தொகை எடுத்துக்கூறுகிறது. ஐவகை நிலங்களின் ஒழுக்கங்களான பிரிதல், புணர்தல், ஊடல், இருத்தல், இரங்கல் ஆகிய வைப்பு முறை கொண்டு மகளிரின் வாழ்வில் உள்ள உளவியல் பண்புகளைக் கலித்தொகை பாடல்களின் வழி அறிய முடியும். இலக்கியங்கள் மக்களுடைய வாழ்க்கையில் மனிதர்களின் ஆழ்ந்த அனுபவத்தையும், பேருண்மைகளையும் வெளியிடுவதும் இலக்கியமே ஆகும்.

ஆய்வுத் தலைப்பு

"உளவியல் நோக்கில் கலித்தொகை மகளிர்" எனும் தலைப்பானது ஆய்வுப் பொருளாக எடுத்தாளப்பட்டுள்ளது.

ஆய்வு நோக்கம்

கலித்தொகையின் வழி மகளிரின் உள்ளத்து உணர்வுகளை அறிந்து கொள்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

கருதுகோள்

கலித்தொகை மகளிரின் ஆழ்மன உணர்வுகள் அவர்களின் அன்றாட வாழ்விலும் வெளிப்படுகின்றன. மகளிரின் உள்ளத்து உணர்வுகளும் அவற்றால் ஏற்படும் உந்துதல்களும், மனப்போராட்டங்களும் அவர்தம் இன்பதுன்பங்களைத் தீர்மானிக்கின்றன. கலித்தொகை மகளிரின் உளவியல் பண்புகளின் வழி தற்கால மகளிர் வாழ்க்கை முறைக்கு வழிகாட்டுவதே இவ்வாய்வின் கருதுகோளாகும்.

ஆய்வு எல்லை

"உளவியல் நோக்கில் கலித்தொகை மகளிர்" என்னும் தலைப்பில் அமையும் ஆய்விற்கு எல்லையாக எட்டுத்தொகையில் இடம்பெறும் கலித்தொகை என்னும் நூல்ஆய்வு எல்லையாக அமைந்துள்ளது.

ஆய்வு ஆதாரங்கள்

ஆய்விற்கு ஆதாரங்கள், முதன்மைச் சான்றாதாரம், துணைமைச் சான்றாதாரங்கள் என இருவகையில் அமைகிறது.

முதன்மைச் சான்றாதாரம்

எட்டுத்தொகையில் இடம்பெறும் 'கலித்தொகை' எனும் நூல் மட்டும் ஆய்விற்கான முதன்மைச் சான்றாதாரமாக அமைகிறது.

துணைமைச் சான்றாதாரம்

தொல்காப்பியம், திருக்குறள், அகராதிகள், கலைக்களஞ்சியங்கள், திறனாய்வு நூல்கள், மாநாடுகள், கருத்தரங்க ஆய்வுக்கூறுகள் ஆய்விற்குத் துணை செய்யும் சான்றாதாரங்களாக அமைகின்றன.

ஆய்வு அணுகுமுறை

ஆய்வுத் தொடர்பான கருத்துக்களை விளக்குமிடத்து விளக்குமுறை அணுகுமுறையும், மகளிரின் எண்ணங்களைப் பகுத்துக் கூறுவதால் பகுப்பாய்வு முறையும், மகளிரின் உளவியல் பண்புகளை ஆராயுமிடத்து உளவியல் முறையும், தலைவி, தோழி, செவிலி, காமக்கிழத்தி போன்ற மகளிரை ஆராயுமிடத்து பெண்ணிய அணுகுமுறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இயல் பகுப்பு

இயல் 1 உளவியல் அறிமுகம்

இயல் 2 களவு வாழ்வில் மகளிர் உளவியல்

இயல் 3 கற்பு வாழ்வில் மகளிர் உளவியல்

இயல் 4 உளவியல் சிக்கல்கள்

மேற்கூறப்பட்ட நான்கு இயல்களின் கீழ் ஆய்வின் ஆரம்பப் பணி விரிவடையத் தொடங்கியது.

இயல் 1

உளவியல் அறிமுகம்

உளவியல்-விளக்கம்

உளவியல் (Psychology) என்னும் சொல் கிரேக்க மொழிச் சொற்களான “சைக்கி” என்ற உயிரைக் குறிக்கும் சொல்லையும் ‘லோக்ஸ்’ என்னும் அறிவியலைக் குறிக்கும் சொல்லையும் மூலமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. எனவே ஆரம்பக் காலத்தில் உளவியல் என்பது ஆன்மா, மனம் ஆகியவற்றை ஆராயும் இலக்காகக் கருதப்பட்டது. உளவியல் உள்ளத்தைப் பற்றி ஆராயும் அறிவியல் துறையாகும். உள்ளத்தை உள்ளம், மனம், அகம் எனத் தமிழிலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இவ்வுள்ளம் கண்ணுக்குப் புலப்படாத ஓர் உருவமற்ற பொருளாக உள்ளது. இதனை அதன் செயல்பாடுகள் வழியேதான் நாம் உணர்ந்து கொள்ள இயலுவதாக இருக்கிறது. இவ்வாறிருப்பினும் “ஜே.பி. வாட்சனின் நடத்தைக் கொள்கையில் இதை நடத்தையை ஆராயும் அறிவியல் எனப் பொருள்படுத்திச் சைக்கலாஜி என்பது உள்ளத்தை ஆராய்வதன்று அது நடத்தையை ஆராய்வது” எனப் பொருள் வரையறை செய்தனர். நடத்தையை ஆராய்தல் என்பது பேசுதல், ஓடுதல், கூடுதல் போன்ற புறச் செயல்களையும், உணர்தல், கற்றல், சிந்தித்தல், கற்பனை செய்தல், கனவு காணுதல் போன்ற அகச் செயல்களையும் குறிப்பதாக இருக்கிறது. இவ்வாறு கொண்டால் உளவியல் என்பது உள்ளத்தையும் அதன் அகச் செயற்பாடுகளையும், அதன் தூண்டுதலால் செயற்படும் புறச் செயற்பாடுகளையும் இவற்றின் விளைவால் ஏற்படும் நடத்தையையும் விவரிப்பதாகும்.

தொல்காப்பியத்தில் உளவியல்

தொல்காப்பியப் பொருளதிகாரம், பொருளை அகம், புறம் என இரண்டாகப் பகுத்து மனிதனைப் பற்றியும், உலக நிகழ்வுகள் பற்றியும், இலக்கிய நெறிகள் பற்றியும் மட்டுமன்றி 2000 ஆண்டுகளுக்கு முன்பே உளவியல் நோக்கிலும் ஆராய்ந்துள்ளது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். தொல்காப்பியத்தையொட்டிய காலத்து எழுந்த சங்க இலக்கிய நூல்கள் அனைத்திலும் தமிழ் மக்களது மனம், வாழ்வு, வாழ்வோடு இயைந்த இயற்கை நிகழ்ச்சிகளே இடம் பெற்றுள்ளமையால் சங்கப் பாடல்கள் தொல்காப்பியத்திற்குரிய விளக்கங்களைக் கூறுவனவாகவும் அமைந்துள்ளன.

உளவியல் ஆராய்ச்சி முறைகள்

உளவியல் உண்மைகளைக் கண்டுபிடிப்பதற்கு இத்துறை வல்லுநர்கள் பல உளவியல் ஆராய்ச்சி முறைகளைக் கையாளுகின்றனர். இவை மனிதனது வளர்ச்சி, நடத்தை ஆகியவை பற்றிய விவரங்களைச்

சேகரிப்பதற்கும், திரட்டிய விவரங்களை ஆராய்ந்து அவற்றினின்று உளவியல் விதிகளைப் பெறுவதற்கும் உளவியல் முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றுள் சில பின்வருமாறு,

1. “அகநோக்கு முறை (Method of Introspection)
2. உற்றுநோக்கல் முறை (Objective Observation)
3. வாழ்க்கைத்துணுக்கு முறை (Ancedotal Method)
4. பரிசோதனை முறை (Experimental Method)
5. வளர்ச்சி முறை (Developmental Method)
6. தனியாள் வரலாற்று முறை (Case-History Method)
7. வினாவரிசை முறை (Questionnaire Method)
8. கள ஆராய்ச்சி முறை (Field Study Method)
9. வேற்றுமை முறை (Differential Method)”

மேலே விவரிக்கப்பட்ட உளவியல் முறைகளைத் தவிர, புறத்தேற்று நுண்முறைகள் (Projective Techniques), ஆளுமைச் சோதனை முறை, நுண்ணறிவுச் சோதனை முறை போன்றவை கல்வி உளவியலில் பயன்படுத்தப்படுகின்றன.

உளவியல் நோக்கங்களும் - பயன்களும்

சமூக வாழ்வில் எழக்கூடிய அல்லது பொதுவாக எழுகின்ற சிக்கல்களும், பிரச்சனைகளுக்கும் தீர்வு காண உதவுதல், சமுதாயத்திடம் நம்முடன் வாழ்வோர்களது இயல்புகளை ஓரளவேனும் அறிய உதவுதல், நமது இயல்புகளை நாமே அறிந்து கொள்ள உதவுதல், மனிதப் பண்புகளைத் தெளிவாக்க உதவும் ஆராய்ச்சிகளை நடத்துதல், உடலின் செயல்முறைகளுக்கும், நடத்தைகளுக்கும் இடையில் உண்டாகும் தொடர்புகளையும், விளைவுகளையும் ஒழுங்குமுறையாக்க உதவுதல், பல துறைகளிலிருந்து கிடைக்கும் அறிவைக் கல்விக்குப் பயன்படுத்தி கல்வி சீர்திருத்திற்கு உதவுதல், மனிதன் குழந்தையாகப் பிறந்து வளர்ந்து, முதிர்ச்சி பெற்று பலதப்பட்ட திறமைகள் எல்லாம் செயல்களாக வெளிப்பட உதவுதல் ஆகியவைகளை உளவியலின் நோக்கங்களாகக் கூறலாம்.

இன்றைய வாழ்வின் ஒவ்வொரு கூறிலும், ஒவ்வொரு துறையிலும் உளவியல் ஏதேனும் ஒரு வகையில் உதவி வருகிறது. உளவியலின் நெறி முறைகள் உளவியல் தந்துள்ள ஆராய்ச்சிகளின் முடிவுகள் ஆகியவை எண்ணற்ற வழிகளில் பயன்பட்டு வருகின்றன. மனித நடத்தைப் பற்றிய உளவியல் அறிவு மனித சமுதாயத்தில் காணப்படும் பலவித பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குப் பெரிதும் பயன்படுகிறது. உடல் நலமும், உள நலமும் பெற்று சமூகத்துடன் ஒத்து வாழ்வதற்கு உளவியல் துணை புரிகின்றது. மனிதனது சமூக வாழ்வு சமநிலைப் பிறழாமல் மேலும், மேலும் முன்னேறுவதற்கும் மனிதனது சிந்தனை,

கற்பனை, உணர்ச்சிகள் போன்ற உளச் செயல்களின் இயல்புகளைப் பற்றி அறிந்து கொள்வதற்கும் உளவியல் பயன்படுகிறது.

மன அமைப்பு

சிக்மண்ட் ∴ப்ராய்டு (1856-1939) மனப் பரிணாம வளர்ச்சியையும் நனவிலி மனக் கோட்பாட்டையும் அறிவு பூர்வமான அடிப்படையில் விளங்கியதோடல்லாமல் மனதிற்கும் உடலுக்கும் இடையிலான உறவை அதாவது உடலின் உதவியோடு மனம் தான் தேவையை நிறைவேற்றிக் கொள்ளும் இயல்பையும் விளக்கியுள்ளார். மனம் என்பதைப் ∴பிராய்டு மூன்று நிலைகளில் காண்கின்றார். அவை,

1. இயக்க நோக்கில் மனம் (Dynamic Point of View)
2. சமநிலை நோக்கில் மனம் (Economic Point of View)
3. வகைமை நோக்கில் மனம் (Topographical Point of View)

இம்மூன்று நோக்கும் ஒன்றிலிருந்து ஒன்று முற்றிலும் தொடர்பற்றவை என்று நாம் கொள்ள முடியாது. இம்மூன்று நோக்கும் மனம் என்ற ஒரு முழுமை பற்றிய மூன்று பார்வை என்ற நிலையிலேயே நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

வகைமை நோக்கு மனம் என்பது மூன்று வகையான உணர்வுகளால் மூன்று வகையான உணர்வுப் பிரதிகளின் ஆக்கிரமிப்பால் ஆனது என ∴பிராய்டு 1923-ல் விவரித்தார். அவையாவன,

1. இச்சை உணர்ச்சி (Id)
2. தன் முனைப்பு (Ego)
3. பண்பாட்டுணர்ச்சி (Super / Ego)

இச்சை உணர்ச்சி என்பது உடலின் உதவியோடு தன் தேவையை நிறைவு செய்து கொள்ள வல்லது. தன்முனைப்பு என்பது இச்சை உணர்ச்சிக்கு அப்பாற்பட்டது. இது இச்சை உணர்ச்சியின் உண்மை இயல்பை மாற்றவல்லது. மூன்றாவது பண்பாட்டுணர்ச்சியாகும். இது பண்பாட்டில் நிலைபெற்றுள்ள காமம் முதலியவை பற்றி சமுதாயச் சட்டம் மற்றும் ஏனைய ஒழுங்கு முறைத் தொடர்பான விதிமுறைகளாகும். பண்பாட்டுணர்ச்சி இச்சை உணர்ச்சிக்கு நேர் எதிராகச் செயற்படும் இயல்பினது. மூன்று வகை மனம், மூன்று வகை உணர்வு என்ற அடிப்படையில் மனதை நோக்குவதே வகைமை நோக்கிய பார்வை எனப்படுகிறது. இவ்வாறாக மனத்தின் அமைப்புகளைப் பற்றி அறிஞர்கள் தன் கருத்துக்களைப் பதிவு செய்துள்ளார்கள்.

இலக்கியமும் உளவியலும்

உளவியலுக்கும், இலக்கியத்திற்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. இலக்கியங்கள் மனித மனத்தின் உளவியல் கூறுகளை உள்ளடக்கியதாகவும் காணப்படுகின்றன.

மனிதனின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் பதிவேடாக அமைவது இலக்கியமாகும். தன்னைத்தான் அறிவதற்கும், தன்னுடைய ஆளுமையை வெளிப்படுத்துவதற்கும் ஒரு கருவியாகப் படைப்பாளனுக்கு உதவுவது இலக்கியமாகும். இலக்கியத்தின் உயிரோட்டமாக உள்ளத்துள் முகிழ்ந்து எழும் எண்ணங்கள் அமைகின்றன. வாழ்க்கை நடப்புகளை அடிப்படையாகக் கொண்டு இலக்கியம் படைக்கப்படுவதால் மனிதனின் உளச்சிந்தனையை எளிதாக அறிய முடிகிறது. உளவியல் வகுத்துக் காட்டும் மனித மனப் போக்குப் பொருந்தாத இலக்கியப் படைப்புகள் உலக இயல்புக்கு மாறுபட்டதாகக் கருதப்படும். உண்மையான வாழ்வை உலக இயல்புக்குத் தக்கவாறு உருவாக்கிக் காட்டும் இலக்கியமே சிறந்ததாக மதிக்கப்படும். ஆகவே உள்ள உணர்வுகளை வெளிப்படுத்தும் இலக்கியங்கள் உளவியலுடன் தொடர்புடையவையாக அமைகின்றது.

இயல் 2
களவு வாழ்வில் மகளிர் உளவியல

களவு

களவு என்பது திருமணத்திற்கு முன்பு ஏற்படும் காதல் வாழ்வாகும். தலைவனும் தலைவியும் சந்திப்பின் பொழுது ஒருவரையொருவர் காதல் வயப்பட்டு பெற்றோர் அறியாலும். ஊரார் அறியமாலும் ஒன்று கூடி வாழ்வது களவு வாழ்வாகும். களவு எனும் சொல்லுக்கு

> **“கூடுதல், கயவு, காப்பு, கரவடம், கரவு, கள், கள்ளம்,**
> **கள்ளல், சோரம், சோர்வு, தேயம், படிறு, பட்டினம்”** (வீரமாமுனிவர்.சதுரகராதி. ப 249)

என்று கூறுகிறார். தொல்காப்பியர் குறிப்பிடும் எண்வகை மணங்களுள் கந்தர்வ மணமானது களவினை ஒக்கும் என்பது பெறப்படுகிறது. இருப்பினும் கந்தர்வ மணத்தில் களவில் கொள்ளும் மெய்யுறு புணர்ச்சியில் மட்டுமே இடம்பெறும் ஆயின் அது கற்பு வாழ்க்கைக்கு வழிவகுக்காது.

மகளிரின் மெய்ப்பாடுகள்

ஒருவருடைய கருத்துப் பரிமாற்றச்சூழலில் அவர்களின் உணர்ச்சிகளின் அடிப்படையில் வெளிப்படுத்தக்கூடிய புலப்பாடுகளே மெய்ப்பாடு ஆகும். உளவியலானது மனித உணர்வுகளுடன் தொடர்புடையதால் இதனை உணர்வுநிலை பற்றிய அறிவியல் என்பர். உலகைப் புதியக் கோணத்தில் மாற்றுவதற்கு முயலும் உளவியலானது இலக்கியத்தில் பெருமளவு காணப்படுகிறது. மனிதனின் அன்றாட

வாழ்விலும், செயலிலும் உளவியல் இருந்தாலும் குறிப்பாக மக்களின் வாழ்வினைப் பிரதிபலிக்கும் இலக்கியங்களில்உளவியல்ஆக்கம்பெற்றுள்ளது.இவ்விலக்கியங்களில்இடம்பெறும்கலித்தொகையில் மனிதர்களின் மெய்ப்பாடுகளில் உணர்வுகள் மேலோங்கி நிற்கிறது.

நகை

நகை என்பது முகத்தில் தோன்றும் மகிழ்ச்சியைக் குறிக்கும். இந்த மகிழ்ச்சி என்னும் மெய்ப்பாடானது எள்ளல், இளமை, பேதைமை, மடன் என்ற நான்கின் வழியாகத் தோன்றும் இதனை,

“எள்ளல் இளமை பேதைமை மடனென்று
உள்ளப் பட்ட நகைநான் கென்க” (தொல். பொரு. மெய். நூற். 4)

எனத் தொல்காப்பியம் எடுத்துரைக்கிறது. எள்ளல் என்பது கேலிப் பேச்சாகும்.

அழுகை

அழுகை எனும் மெய்ப்பாடானது கண்களில் இருந்து நீரைச் சிந்தும் ஓர் உணர்ச்சிவசப்பட்ட மனநிலையாகும். மலர்களில் தாதினைத் தேடியுண்ணும் வண்டு போல் தலைவன் தலைவியின் நலம் கெடுதலைக் காணாது அவளின் அழகினை மட்டும் உண்ணுகிறான். இதனால் இவன் சுயநலத்தை உடையவன் ஆவான் நாணுடையவன் அல்லன் என்று கூறுகிறாள்.

“நலனுடையார் மொழிக்கண் தாவார் தாம் தம்நலம்
தாது தேர் பறவையின் அருந்திறல் கெடுக்குங்கால்
ஏதிலார் கூறுவ தெவனோ” (கலி. பாலை. 22, 6-8)

எனும் பாடலடிகளால் தோழி தலைவனின் இழிநிலை குறித்து எடுத்துரைக்கிறாள்.

இளிவரல்

இளிவரல் என்பது பிறரால் இகழப்படுவதாகும். மானம் குன்ற வரும் தாழ்வு நிலை நாணத்தக்க செய்கையால் இச்சுவைப் பிறக்கும் என்பதனை, தலைவன் தலைவியைக் கூடி பிரிந்து சென்றான். அவன் மீண்டும் வந்து கூடும் காலம் இரவா அல்லது பகலா என அறியாது தலைவி வருந்துகிறாள். பகற் பொழுதில் பகற்போய் இரவு வரட்டும் என்றும், இரவு நேரம் வந்ததும் இரவு போய் பகற்பொழுது வரட்டும் எனக் கூறுகிறான். இதன் மூலம் தலைவன் அடுத்தப் பொழுதிலாவது வரமாட்டானா என்று ஏங்கும் தவிப்பு தலைவியிடம் தெரிகிறது.

“புல்லிய கேளிர் புணரும் பொழுதுணரேன்
எல்லி ஆக எல்லை என்று ஆங்கே பகல் முனிவேன்
எல்லிய காலை இரா முனிவேன் யான் உற்ற
அல்லல் களைவா ரிலேன்” (கலி. நெய். 144, 51-54)

எனும் பாடலடிகளில் தலைவி கடவே நான் எய்திய வருத்தத்தைப் போக்க இங்கு எனக்கு யாருமில்லை எனக் கூறி தலைவனின் பிரிவினை எண்ணி தலைவி கடலை நோக்கி புலம்புகிறாள். எனவே தலைவனின் மீது அன்பு கொண்ட தலைவியின் வருத்தமான மனநிலையானது வெளிப்படுகிறது.

மருட்கை

மருட்கை என்பது வியப்புச் சுவையாகும். எப்பொழுதும் நடக்காத மற்றும் இயற்கைக்குப் புறம்பான நிகழ்ச்சிகள் நிகழும் பொழுது இச்சுவைப் பிறக்கிறது. இதனை, பொருள் தேடிச் செல்லும் தலைவன் அப்பொருளைக் கொண்டு சிற்றின்பால் நுகர்வானில்லை. இல்லறம் காத்தலும், சுற்றம் ஓம்பலும், பசித்தோரை துய்க்கச் செய்தலுமே அவன் கடமையாகும். அதனால் தான் வினையே ஆடவர்க்கு உயிரே எனக் கூறுகின்றனர். இல்லென்று இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு எனக் கருதுபவரின் புகழ் ஞாயிறுபோல் உயர்ந்து பெருமையுடன் விளங்கும் என்பதனை

"பகலின் விளங்கு நின் செம்மல்" (கலி. பாலை. 9-11)

எனும் பாடலடி தலைவனின் பெருமையை உணர்த்துகின்றது.

அச்சம்

அச்சம் என்பது மனிதரிடத்தில் அவரவர் மனத்துணிவிற்கு ஏற்ப இருப்பினும் பொதுவாகவே அனைவரிடத்திலும் இவ்வுணர்ச்சி அமைந்திருக்கிறது. இதனை,

"பூங்காரை நிலத் தழீஇத் தளர் பொல்கிப்
பாங்கருங் கானத் தொளித்தேன்" (கலி. முல். 115, 14-15)

எனும் பாடலடிகளில் தலைவன் கொடுத்த பூவினைத் தலைவி தலையில் சூட்டினாள். அப்போது வீட்டில் செவிலித்தாயின் முன் அப்பூவானது கீழே விழுந்தது. இதனால் களவொழுக்கத்தின் வெளிப்பாடு செவிலித்தாய்க்கு தெரிந்துவிட்டது எனத் தலைவி தோழியிடம் கூறுகிறாள். இந்நிலையில் தலைவி தாழை உடுத்திய நீல ஆடையை கையாலே பிடித்துக் கொண்டு அச்சத்தினால் மெல்ல மெல்ல நடந்து அருகே உள்ள கானகத்தின் பின் ஒழிந்து கொள்கிறாள் என்று கூறும் போது தலைவி தாயின் மீது கொண்டுள்ள அச்சம் வெளிப்படுகிறது.

பெருமிதம்

பெருமிதம் என்பது ஆற்றல், வீரம் முதலியவற்றால் ஏற்படும் மகிழ்வானஉணர்வாகும். இதில் கல்வி என்பது அறிவின் திறன் மற்றும் தறுகண் என்பது அஞ்சத்தக்கன கண்டு அஞ்சாமையாகிய வீரம் மற்றும் புகழ்மை என்பது பழியோடு செய்யாத புகழ்ச்சித் திறம் ஆகும். கொடை என்பது தன்னிடம்

உள்ளதை பிறர்க்குக் கொடுத்தல் இவை நான்கும் ஒருவரிடத்தில் இருக்கும் பொழுது பெருமிதம் எனும் மெய்ப்பாடானது இயல்பாகத் தோன்றுகிறது. இதனை,

"வல்லார்முன் சொல்வல்லேன் என்னைப் பிறர்முன்னர்க்
கல்லாமை காட்டியவாள் வாழி" (கலி. நெய். 141, 19-20)

எனும் பாடலடிகளில் குற்றமுடைய சொற்களை சொல்லாதவர் வல்லார்கள் அவர்கள் முன்பு வல்லானாகிய என்னை எனக் கூறுவதில் தலைவனின் கல்வி குறித்துப் பெருமிதம் தெரிகின்றது.

வெகுளி

வெகுளிஎன்பதுசினம்என்பதையும்அதன்இயல்பினைஉறுப்பறைஎன்பதுஉறுப்பைக்குறைத்தல், குடிகோள் என்பது பிறருடைய குடிப்பிறப்பின் உயர்வுக்கும், அவருடைய சுற்றத்தார்க்கும் கேடு விழைதல், அலை என்பது கோல் கொண்டு அடித்து வருத்துதல், கொலை என்பது பிறருடைய அறிவு, புகழ் ஆகியவற்றை அழித்துப் பேசுதலாகும்.

"அலவுற்றுக் குடி கூவ ஆறு இன்றிப் பொருள் வெ.்கி
கொலை அஞ்சா வினைவாரல் கோல் கோடியவன் நிழல்" (கலி. பாலை. 10, 5-6)

எனும் பாடலடிகளில் குடிமக்கள் துன்பத்தை நினைத்து வருந்தும்படி கொலைத் தொழிலுக்கு அஞ்சாத அமைச்சரால் நெறியன்றி பொருளை வாங்கிக் கொண்டு,செங்கோல் வளைய ஆட்சி செய்யும் மன்னன் எனக் கூறுவதில் கொலை செய்ய முயலக் கூடிய அளவிலான சீற்றம் தோன்றும் மெய்ப்பாடு அமைந்துள்ளது.

உவகை

மகிழ்வுற்ற மனநிலையில் தோன்றும் உணர்வே உவகையாகும்.

"புல்லினத்து ஆயர் மகளிரோடு எல்லாம்
ஒருங்கு விளையாட" (கலி. முல். 111, 5-6)

எனும் பாடலடிகளில் பாங்கர் கொடி, முல்லைக் கொடி போன்றவை பரவியுள்ள தோட்டத்தில் ஆடு, மாடு, எருமை மேய்க்கும் ஆய மகளிர்கள் அனைவரும் ஒன்று கூடி விளையாடினார்கள் என்பதில் மன மகிழ்வு குறித்தும், விளையாடல் குறித்த மெய்ப்பாடும் அமைந்துள்ளது. இதனால் அனைத்து மகளிரும் உயர்வு, தாழ்வு இன்றி விளையாடி மகிழ்கின்ற உவகையின் வெளிப்பாடு வெளிப்படுகின்றது. தன் துணையுடன்தோழியுடன் ஆடிப்பாடி விளையாட ஆறு, குளம்போன்ற இடங்களுக்கு சென்றுமனமகிழ்ச்சியின் உள்ளுணர்வினை அறியமுடிகிறது.

குறியிடம்

தலைவனும் தலைவியும் தனியாகக் கூடி இன்புற்று மகிழ்வதற்கு ஏற்ற இடமே குறியிடம் என்று பெயர்.இக்குறியிடம் தோழியால் தான் நிகழும் தோழியால் தான் இடமும் ஏற்பாடு செய்து தரப்படும். இவை இரண்டு வகைப்படும். அவை

(1) பகற்குறி

(2) இரவுக்குறி

(1) பகற்குறி

தலைவனும் தலைவியும் தோழியின் உதவியால் ஒன்று கூடி இன்புற்று வாழ பகற்காலத்தில் ஓரிடத்தில் சந்தித்து இருவரும் மகிழ்ச்சி அடைவார்கள். தலைவன் தலைவி இருவரும் பொதுவான இடங்களிலே பகற்குறி சந்திப்பு ஏற்படும். தலைவி தலைவனை கண்டு மறுநாள் தலைவனை சந்திப்பதற்கு தலைவி குறியிடம் கூறுவதனை கலித்தொகையில் காணமுடிகிறது.

“பாங்கு அரும் பாட்டாங்கால் கன்றொடு செல்வோர்
எம் தாம்பின் ஒருதலை பற்றினை ஈங்கு எம்மை
கலத்தொடுயாம் செல்வுழி நாடி புலத்தும்
வருவையால் நாண்இலி! நீ” (கலி.பாலை 176:1-17)

தலைவன் இருகுறி இடத்தும் வந்து செல்லுதல் ஊரின் அலரால் தடைப்பட்டது. இதனால் தலைவனைக் காண வேண்டும் என்ற வரைதல் வேட்கை தலைவியிடம் காணப்பட்டது என்பதனை நற்றிணை (102) எடுத்துரைக்கின்றது.

(2) இரவுக்குறி

இரவுக்குறி என்பது தலைவன் தலைவியின் இருப்பிடத்திற்கு வந்து இல்லத்திற்கு வெளியே உள்ள இரவில் தலைவன் தலைவியை கூடி மகிழ்வது இரவுக்குறியாகும். இரவுகுறியில் வரும் தலைவனை எண்ணி தலைவியும் தோழியும் வேதனையடைகிறார்கள். தலைவன் இரவில் வருவதை தவிர்க்க விரும்புகின்றனர். இரவில்வருவதால்தலைவனுக்குஏதேனும்துன்பம்ஏற்பட்டுவிடுமோஎன்கிறஅச்சத்தினால் தோழிஇரவுக்குறிமறுத்துதலைவிக்காகபகலில்வரும்படிஎடுத்துக்கூறுவதோடுஇத்துயரினைமுழுமையாக போக்குவதற்கு விரைவில் தலைவியை மணம் செய்துகொள்ளுமாறு தோழி வேண்டுகிறாள். இதனை

“ஒளிறுவேல் வலன் ஏந்தி ஒருவன்யான என்னாது
களிறு இயங்கு ஆரிடை ஈங்கு நீ வருவதை
அதனால் இரவில் வாரல் ஐய”

எனும் தலைவன் இரவில் வரும் வழியில் கொடிய விலங்குகளால் ஆபத்து தேரிடலாம் என்று எண்ணி தோழி தலைவனிடத்தில் இரவுக்குறி மறுத்து கூறுகிறாள்.

அலர்

தலைவன் தலைவியின் களவு ஒழுக்கத்தை ஊர் மக்கள் ஒருவருக்கொருவர் மறைவாகவும், வெளிப்படையாகவும் பேசுவது அலர் என்று கூறப்படுகிறது. தலைவன் தலைவியின் களவொழுக்கமானது கற்புநெறியாக அமைவதற்கு அலர் காரணமாகிறது. தலைவன் தலைவியின் களவொழுக்கம் வெளிப்படுதலால் ஊரார் பழி தூற்றுகின்றனர்.இதனால் தலைவி வருத்தம் அடைகின்றாள் எனவே நீ அவளை விரைவில் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதைத் தோழி கூறுகிறாள். தலைவன் தலைவியை இருவருக்கும் இடையில் நிகழ்ந்த களவு வாழ்க்கை அலராக மாறியதால் அதனால் தலைவிக்கு காவல் நீடித்துள்ளது அதனால் தலைவன் தன்னை மணந்து கொள்ள வருவனோ இல்லையோ என்ற அச்சத்தில் தலைவி இருக்கிறாள்.

“தகையவர் கைச் செறித்த தாள்போல் காந்தள்
முகையின் மேல் தும்பி இருக்கும்” (கலி.குறி. 43:8-9)

எனும் பாடலடிகளில் வண்டு காந்தள் அரும்பின் மீது அமர்ந்து அவை மலரும் காலத்தைப் பார்த்திருப்பது போன்று தன் உறவினர்களின் உள்ளம் மகிழ்ந்து இத்திருமணத்திற்கு உடன்படும் காலத்தை எதிர்பார்த்து தலைவி காத்திருக்கிறாள் எனும் பொருள் அமைந்துள்ளது.

கனவு

கனவு என்பது நுண்ணுடம்பின் நுகர்வு.மன ஆசைகளின் நிறைவேற்றமே கனவு என்று உளவியலார் கூறுகிறார்கள்.தலைவனோடு தலைவி கூறி இன்பம் பெற வேண்டும் என்பது தலைவியின் விருப்பமாக அமைகிறது. ஆனால் தலைவன் வராத காரணத்தால் அவ்விருப்பம் நிறைவேறாமல் அடிமனத்தில் ஆழமாகப் பதிந்து கனவாகிறது.

“நனவின் வாரா நயனி லாளனைக்
கனவிற் கண்டு யான் செய்தது” (கலி 128)

எனும் பாடலடிகளில் தலைவன் நேரில் வந்தது போன்று கனவில் கண்ட தலைவியின் முகம் பொலிவு பெற்றது என்பதனை அறியமுடிகிறது.

பசலை நோயுடன் நொது மலர் வரைவு

சங்க காலத்தில் முதுமை மகளிர் வீட்டிலுள்ள பெண்களை அதாவது தலைவியை தினைப்புனம் காத்தல் வேண்டி அனுப்புவர்கள்.அத்தகையக் காலங்களில் இரவுக்குறி, பகற்குறிகளில் தலைவன் வந்து தலைவியுடன் புணர்ந்து பிரிந்து செல்வான்.அதனால் அவளது உடலில் தோன்றுகின்ற நிறவேறுபாடுகள் போன்ற மாற்றங்களே பசலை நோய் படர்தலாகும்.

முல்லைக்கலியில் ஆயர்குலத் தலைவி தன் தலைவனை கைவிட்டு மற்றொரு ஆடவரை திருமணம் செய்து கொள்ள மாட்டாள் என்பதனை

"விரிநீர் உடுக்கை உலகம் பெறினும்
அருநெறி ஆயர் மகளிர்க்கு
இருமணம் கூடுதல் இல் இயல்பு அன்றே" (கலி.மு 114:19-20)

என்று குறிப்பிடுகின்றது.

அறத்தோடு நிற்றல்

தலைவன் தலைவியின் களவு ஒழுக்கம் கற்பொழுக்கமாக மாறுவதற்கு அறத்தொடு நிற்றல் முக்கிய இடம்பெறுகிறது. சங்க இலக்கியங்களில் அகவாழ்வியலின் பண்பாட்டினை கொண்ட ஒரு நிகழ்வு தான் அறத்தோடு நிற்றலாகும்.தோழி அறத்தோடு நிற்கும் போது தலைவனின் நாட்டுப் பெருமை மற்றும் அந்நாட்டின் தினைப்புனத்தில் உள்ள வளங்களையும் சிறப்புகளையும் செவிலிதாயிடம் எடுத்துக்கூறி இத்தகைய நாட்டுக்கு உரியவன் தலைவன் என்று கூறுகிறாள். இதனை

"அவனும்தான் ஏனல் இதணத்து அகிற்புகை உண்டியங்கும்
வான்ஊர் மதியம் வரைசேரின் அவ்வரை
தேனின் இறால் என ஏணி இழைத்திருக்கும்
கான்அகல் நாடன் மகன்" (கலி.குறி 3)

எனும் பாடலடிகளில் அறிய முடிகிறது.

உடன்போக்கு

தலைவனும் தலைவியும் களவில் கூடி மகிழ்ந்து இன்புற்று இருக்கும் போது அதனைப் பெற்றோர் தெரிந்து கொள்வதால் களவொழுக்கத்திற்கு தடை ஏற்படுகிறது.இதனால் தலைவனும் தலைவியும் பிறர் அறியாமல் உடன்போக்கு மேற்கொள்கிறார்கள்.தலைவியின் உடன்போக்கிற்கு இற்செறிப்பு.ஊரார் அலர், வெறியாட்டு, நொதுமலர் வரைவு ஆகிய சூழ்நிலை தடைகள் ஏற்படுவதால் தலைவனும் தலைவியும் உடன்போக்கினை மேற்கொள்கிறார்கள். தலைவியைப் பற்றி ஊரார் அலர் பேசுவதால் தாய் இடித்துக் கூறும் சொற்கள் தலைவியை உடன்போக்கிற்கு அறிவுறுத்தியது.இதனை வள்ளுவர்

"ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளும் இந்நோய்" (குறள் 1147)

எனும் குறளடிகளில் வள்ளுவர் தெரிவிக்கிறார்.

தோழியின் அறிவுத்திறன்

தலைவியின் உடன்பிறவா சகோதரியாக ஒன்றிய மனமுடையவளாக காணப்படும் தோழி செவிலித்தாயின் மகள் இதனைஇலக்கியங்களில் தோழியின் குணத்தின் அழகு நிறையவே உள்ளது.

தலைவியின் முதல் களவு கூட்டத்தில் தன் காதல் நிலையினை தோழியிடம் வெளிப்படுத்த இயலாமல் தலைவி தவிக்கின்றாள். அத்தகைய நிலையில் தலைவியை ஆராய்ந்து அறிகின்ற நுண்ணறிவுடையளாக தோழி விளங்குகின்றாள். இதனை

“பாவை தந்தனைத்தற்கோ
நெடுங்கய மலர் வாங்கி நெறித்துத் தந்தனைத்தற்கோ
தெரிவேய்த் தோள் கரும்பு எழுதித் தொய்யில் செய்தனைத்தற்கோ”

(கலி 76:7,11,15)

எனும் பாடலடிகளில் தலைவி தோழியைக் கண்டு அஞ்சி தன் காதலை வெளிப்படுத்த முடியாமல் தவித்துநின்றாள். இருப்பினும் தோழி தலைவியின் களவுவொழுக்கத்தின் உண்மையினை தலைவியின் உடல் மாறுபாட்டாலும் அவளது செயல் மாறுபாடுகளிலும் தோழி அறிந்து கொள்கிறாள்.

இயல் 3
கற்பு வாழ்வில் மகளிர் உளவியல்

கற்பு

கற்பு வாழ்வு என்பதற்கு தொல்காப்பியர் மரபு நெறிப்பட்ட ஒன்றாகும் என்று

“கற்பெனப்படுவது கரணமொடு புணரக்
கொளற்குறி மரபிற் கிழவன் கிழத்தியை
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே” (தொல். பொருள். கற்பியல் 140)

எனும் நூற்பாவில் கூறியுள்ளார். மணவிழா என்பது கற்பு வாழ்வின் ஒரு நிகழ்வினைக் குறிப்பதாகும். இவையனைத்தும் சமுதாயத்தில் நிகழுகின்ற சடங்குமுறைகள் ஆகும். தலைவியின் பெற்றோர் கொடுப்பவராகவும், தலைவனின் பெற்றோர் கொள்வரும் ஆகும்.

பிரிவுக் காலத்தில் தோழியின் செயல்பாடுகள்

கற்பு வாழ்வில் தலைவன் தலைவியை பிரிவதற்கு நினைக்கும் போதும் பிரிந்து சென்ற பிறகும் தோழி தலைவன் தலைவி இருவரிடமும் கூற்றுகள் நிகழ்கின்றன. தலைவனின் பிரிவினைத் தோழி தடுத்து வாழ்வியலின் அறக்கருத்துக்களை எடுத்துக் கூறுகின்றனர். தலைவனிடம் தன் மனைவியை விட்டுப் பிரியாமல் அவளுடன் மகிழ்வாக வாழ்வதுதான் உண்மையான அன்பு என்று எடுத்துக் கூறுகிறாள். கற்புடைய மனைவியை விட்டுப் பிரியாமல் வாழ்வதே அறம் என்று கூறித் தலைவனின் பிரிவினைத் தடுக்கிறாள். இதனை,

இடன் இன்றி இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவெனக்
கடன் இறந்து செயல்சூழ்ந்த பொருள் பொருளாகுமோ

வடமீன்போல் தொழுதேத்தும் வயங்கிய கற்பினாள்
தடமென்தோள் பிரியாமை பொருளாயின் அல்லதை''

(கலி. 2 : 19-22)

எனும் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. எக்காரணத்திற்காகவும் மனைவியை விட்டுப் பிரிந்து வாழ்தல் கூடாது. இதுவே இல்லறவாழ்வின் அறம் என்றும் எடுத்துக்கூறப்படுகிறது.

இல்லற மாண்பு

சங்க கால மக்கள் இல்லறத்தை நல்லறமாகப் போற்றிப் பல்வேறு பாடல்களைப் பாடியுள்ளனர். புதிதாகத் திருமணம் புரிந்த தலைவனும் தலைவியும் இல்லற வாழ்வை இனிதே துவங்குகின்றனர். தலைவி செல்வர் வீட்டில் பிறந்ததால் சமைத்தறியாதவள் இருப்பினும் தன் கையால் தலைவனுக்கு சமைத்துத் தர ஆவல் உடையவள் ஆவாள். புதுமையாக இயற்றிய திறத்தைக் காட்டிலும் எம் தலைவன் எம்மைத் திருமணம் செய்த நாளினும் இப்பொழுது பெரிதும் இனியனாக விளங்குகின்றான் என்பதனைத் தலைவி,

“புதுவது புனைந்த திறத்தினும்
வதுவை நாளினும் இனியனால் எமக்கே” (அகம். 352)

எனும் அடிகளில் தலைவன் தலைவி இருவரின் இல்லற வாழ்வில் அமைய வேண்டியவை அன்பு மட்டுமே ஆகும்.

விருந்தோம்பல்

விருந்தோம்பல் என்பது நம் பண்பாடுகளில் ஒன்றாகும். விருந்தோம்பல் நிகழ்ச்சியினை தலைவன் தலைவி இருவரும் இணைந்து விருந்தினர்களை மகிழ்ச்சியடையச் செய்து அவர்கள் மனம் மகிழ்ந்து செல்லுமாறு அவர்களை அனுப்பி வைப்பதாகும். விருந்தினர்கள் இரவு நேரத்தில் வருவராயினும் அவரை இன்முகத்துடன் வரவேற்று பெருமிதம் கொள்கிறாள். சங்ககாலம் முதல் இக்காலம் வரை தமிழர்களின் பாரம்பரியப் பண்புகளில் ஒன்றானது விருந்தோம்பல் ஆகும். விருந்தினர்களை இன்முகத்தோடு வரவேற்று விருந்து படைத்து மகிழ்விப்பது தமிழ் மக்களின் மரபாகும்.

சங்ககாலத்துப் பெண்கள் விருந்தினரை இன்முகத்தோடு வரவேற்று அவர்களுக்கு இனிய உணவினை கொடுப்பதினைத் தன் கடமையாகக் கருதினார்கள். தலைவன் பரத்தையிடமிருந்து திரும்பி வந்த போது தலைவி தலைவனோடு பேசாமல் ஊடல் மேற்கொள்கிறாள். அப்போது தலைவன் குதிரைத் தேரில் விருந்தினரோடு வருகிறான். பின்பு தலைவி விருந்தினரை உபசரிக்க வேண்டும் என்பதால் தலைவி ஊடலை மறந்துவிடுகிறாள். இதனை,

“எல்லினை வருதி எவன் குறித்தனை எனச்
சொல்லா திருப்பேனாயின் ஒல்லென
விரிஉளைக் கலிமான் தேதோடு வந்த
விருந்து எதிர்கோடலின் மறப்பல் என்றும்” (ம. கலி. 10)

எனும் அடிகளில் காண முடிகிறது.

பரத்தையர் பிரிவு

கற்பு வாழ்க்கையில் தலைவன் பரத்தையை விட்டு வீடு திரும்பும் நிலையில் தலைவி ஊடல் கொள்வதும் சினந்து திட்டுவதும் தோழி வாயில் மறுப்பதும் போன்ற பல செயல்கள் நடைபெறும். தலைவன் பிரிவது உறுதி என எண்ணுமாறு ஒரு நிகழ்வு நடந்தது. அன்று என் தோளில் இரவு துயில் கொண்டவர் கனாக் கண்டு,

‘வெம்மையுடைய கானலைக் கடந்து சென்று, நடுவுநிலைமையோடு முயற்சி செய்து, யான்
பொருள் தேடி வரும் அளவும்
இவள் துன்பமடையாமல் வாட்டமில்லாமல் மனையறங் காத்துப் பேணி நிற்க வல்லமை
உடையவளோ’ (கலி. 24)

என்று பிதற்றினார் என்றும் தோழியிடம் கூறுவதிலிருந்து தலைவியின் வருத்தத்தைப் போக்கும் பொருட்டு பல அன்பு மொழிகளைக் கூறும் பாங்கு வெளிப்படுகிறது. சரிசெய்தல் என்னும் உளவியல் கூறால் தலைவியானவள் தலைவனை நினைத்து இல்லறக் கடமையாற்றவும் அவனின் நுண்ணிய மாறுபாடுகளை உணர்ந்து கொள்ளும் ஆற்றல் வாய்ந்தவளாகவும் படைக்கப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது.

ஊடல்

தலைவி தன் குலத்திற்குரிய பண்புகளை இழக்காமல் தன் பணியையும், கடமையையும் சரியாகச் செய்து வாழ்பவள் தலைவி ஆனால் தலைவன் தலைவியைப் பற்றிக் கவலை கொள்ளாமல் பரத்தையிடம் சென்று மகிழ்வுடன் இன்பத்தினைக் கழித்து தங்கிக் கொண்டு இருக்கிறான் தலைவன். இன்று இல்லம் திரும்பிய தலைவன் மீது தலைவி ஊடல் கொள்கிறாள். தலைவியின் குடும்ப வாழ்விற்கு இடையூறாக வரும் பரத்தையின் செயல்பாடுகளால் தலைவியின் சினத்திற்கு ஆளாகிறான். இச்சூழ்நிலையில் இல்லத்திற்குத் திரும்பிய தலைவன் தலைவியின் ஊடலைத் தீர்க்கும்படி தோழியிடம் வேண்டுகிறான். தலைவிதலைவனின்தவறானஒழுக்கத்தினைஇடித்துக்கூறுவதையும்தலைவன்தலைவியின்உள்ளத்தின் வேதனையை பொருட்படுத்தாமல் தலைவியின் ஊடலைத் தீர்க்க அவளுடன் கூடி வாழ்வதே ஆகும். அதுவே தலைவியின் நிலையான இன்பம் என்பதனை உணர்ந்த தலைவன் தலைவியின் ஊடலைத் தீர்ப்பதற்கு முயல்கிறான். இதனை,

“நனவினான் வேறாகும் வேளா முயக்கம்
மனைவரின் பெற்றுஉவந்து மற்றுஎம் தோள்வாட
இனையர்என உணர்ந்தார் என்று ஏக்கற்று ஆங்கு
கனவினான் எய்திய செல்வத்து அனையதே
ஐய எமக்கு நின்மார்பு” (கலி. 68 : 21-25)

எனும் அடிகளில் தலைவன் தலைவி ஆகிய இருவரின் உறவும் இல்லற வாழ்வின் கடமைகளும் பலவாகும். ஆகையால் சூழ்நிலைகளுக்கு ஏற்றாற்போல் இருவரும் விட்டுக்கொடுத்துச் செல்வது தான் இல்லறத்தின் பண்பாகும் என்று கூறுகிறார்.

வாயில்கள்

தலைவன் தலைவி இருவருக்கும் களவு, கற்பு ஆகிய இருவாழ்விலும் துணை நிற்பவர்கள் தான் வாயில்கள் ஆவர். அகமாந்தர்களின் இவ்வாயில்கள் மூலம் உணர்வு மற்றும் உறவு நிலைபெற்று வாழ்வதற்கு வாயில்கள் என்பது இன்றியமையாததாக அமைகிறது.

இயல் 4
உளவியல் சிக்கல்கள்

உளநலச்சிக்கல்

“மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்” என்றார் திருவள்ளுவர். உளநலத்தை பாதுகாத்தல் என்பது எளிய செயலன்று. உடலின் தேவைகள் நிறைவேறுவதால் மட்டும் உள்ளம் நிறைவுற்று விடுவதில்லை. இதனை, மு. வரதராஜன் “உள்ளத்தின் தேவைகளே மக்களின் வாழ்க்கையில் கவலையை வளர்க்கின்றன. உள்ளத்தின் அமைதியும் தெளிவுமே மக்களுக்கு உண்மையின்பத்தை தருகின்றன” என்பார்.

இருமுக உணர்ச்சி

ஒரே பொருளிடத்தில் நேர் எதிரான மனக்கிளர்ச்சிகள் அல்லது மனக்கிளர்ச்சிகள் சார்ந்த போக்குகள் உடனிருத்தலை இருமுக உணர்ச்சியாகும். பிரிவிடை ஆற்றாத தலைவியை மாலை நேரமும் அலர் உரைகளும் வருத்துகின்றன. இந்நிலையில் தலைவி என் நெஞ்சமும் என்னொடு தங்கவில்லையே என்று கவலையுற்றுப் பேசுகிறாள்.

“மாலையும் அலரும் நோனா தெம்வயின்
நெஞ்சமும் எஞ்சுமற் றில்ல எஞ்சி
உள்ளா தமைந்தோர் உள்ளும்
உள்ளில் உள்ளம் உள்ளுள் உவந்தே” (கலி.118 : 22-25)

தலைவி பிரிந்து சென்ற தலைவனைத் தேடி தொடர்ந்து கண்டு மகிழும் உள்ளத்தின் கூறும் ஆனால் இருந்த இடத்திலேயே வருந்தி மறுகும் உள்ளத்தின் கூறும் என இருநிலையாக தொடர்பறுதல் போக்கு நிகழ்கிறது.எவ்வாறு ஆயினும் உள்ளத்தில் தலைவனிடம் உவந்து சென்றது என எண்ணுதல் ஒருவகையான ஆறுதலாகி விடுகிறது.

உளத்தற்காப்பு இயங்குமுறைகள்

மனித வாழ்க்கையில் ஏற்படும் தோல்விகள் அல்லது ஏமாற்றம் மற்றும் போராட்டம் ஆகியவை ஒருவருக்குத் தன் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளத் தடையாக அமைகின்றன. மேலும் அவர்கள் தம்மைத் தாமே தாழ்வாக எண்ணிக் கொள்கிறார்கள். அச்சமயங்களில் தற்காப்பு இயங்குமுறை அச்சூழலை இயக்குகின்றது. தலைவனின் பொருள்வயிற் பிரிவை தவிர்க்க இயலாத போதும் அவன் திரும்பி வரும் வரை தலைவி அமைதியுடன் காத்திருத்தலும் தலைவிக்கு உளநலம் தரும். உளநலம் உடைய தலைவி அதனைத்தான் செய்வாள்.

"உற்ற திதுவென எய்த உரைக்கும் உரகைத் துண்டாயின்" (கலி. 142 : 20-21)

வாழ்வில் நேரும் துன்பங்களை உணரும் திறனும் அதனை ஏற்றுக் கொள்ளும், பொறுக்கும் ஆற்றலும் உளநலத்தைப் பாதுகாக்கும் என தலைவியின் நிலை எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

சூழ்நிலைத் தடைகள்

சூழ்நிலைத் தடைகள் என்பது விரிந்த பொருளில் காண்பதாயின் பருப்பொருள் இயலானதும் சமூக இயலானதுமான பல்வகை தடைகளைப் பற்றி குறிக்கின்றனர். அவை நிலநடுக்கம், பெருந்தீ, பெரும்பஞ்சம், விபத்துகள், அன்பிற்குரியவரின் மரணம் போன்றவற்றை சூழ்நிலைத் தடைகள் என்பர்.மழையற்ற நிலத்தில் மீனினம் வாடும், நீர் காணா மனிதர் நெஞ்சுடைந்து உலைவர். வெப்பத்தால் தாகம் மிகும். இவை போன்ற சூழ்நிலைத் தடைகள் ஏற்படுகின்றன.

பிரிவும் தீர்வும்

தலைவன் தலைவி கூடி இருந்து இன்பம் துய்க்கின்றனர். இந்நிலை நீடிப்பதில் தடைகள் ஏற்படுகின்றன. இத்தடையே பிரிவாகக் கருதப்படுகிறது. தலைவன் வாழ்வில் பிரிவானது ஓதல், பகை, தூது என மூன்று வகையில் அமைகின்றன. ஏதேனும் ஒரு சூழலில் தலைவியை விட்டுத் தலைவன் பிரியும் போது தலைவியின் உடல்நிலை வாட்டமுற, எண்ணங்கள் ஓட்டமின்றித் தவிக்க, உணர்வுகள் செயலிழக்கும் நிலை ஏற்படுகின்றது. தலைவன் பிரிவால் தலைவிக்கு ஏற்படும் வருத்தத்தை குறள்,

செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை[25] (குறள். 1151)

என்று குறிப்பிடுகின்றது. அதாவது என்னைப் பிரியாமல் இருப்பேன் என்பதை மட்டும் என்னிடம் கூறுக. சென்று விரைவில் வருவேன் என்பதை என்னிடம் கூறினால் அப்பிரிவைத் தாங்கி உயிரோடு இருப்பவரிடமே இவ்வாறு கூறுக எனப் பிரிவின் தன்மையைக் குறிப்பிடுகிறாள் தலைவி.

உள்ள வேட்கையும் தீர்வும்

தலைவனும் தலைவியும் களவொழுக்கத்தை மேற்கொண்டு ஒழுகினர். களவொழுக்கத்தில் தந்தை, தனயர் முதலானோர் திருமணத்திற்கு மறுப்புக் கூறிய நிலையில் தோழி அறத்தொடு நிற்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகிறாள். அதனால் தலைவியின் களவொழுக்கத்தைச் செவிலிக்குக் கூறினள். அவள் நற்றாய்க்கு அறத்தொடு நின்று அறிவித்தனள். நற்றாய் தந்தை தனயா்க்கு அறத்தொடு நின்றனள். இறுதியில் தனயர் திருமணத்திற்கு உடன்பட்டனர். வீட்டாரின் சம்மதம் இன்றி எவ்வாறு திருமணம் நடக்கும் என்று வருந்திய தலைவிக்கு தோழி அறத்தொடு நின்று தீர்வு தருகின்றாள் என்பதனை இப்பாடல் எடுத்துக் கூறுகின்றது.

“காமர் கடும் புனல் கலந்து எம்மோடு ஆடுவாள்
தாமரைக் கண் புதைத்து அஞ்சித் தளர்ந்து அதனோடு ஒழுகலான்,
நீள் நாக நறும் தண் தார் தயங்கப் பாய்ந்து அருளினால்,
பூண் ஆகம் உற தழீஇ போத்தந்தான் அகல் அகலம்
வருமுலை புணர்ந்தன என்பதனால் என் தோழி

(கலி. 39 : 3-5)

இப்பாடலடிகள் தலைவன் தலைவியின் முதற் புணர்ச்சியான புனல் புணர்ச்சியைப் பதிவு செய்துள்ளன.

உள்ள முறிவும் தீர்வும்

தலைவன் தலைவியைச் சந்திக்க இரவுக்குறியில் வந்தபொழுது எதிர்ப்பட்டத் தோழி, தலைவனிடம் இரவுக்குறியில் வருவதனால் ஏற்படும் குற்றமும், அக்குற்றத்தால் வரும் துன்பமும், தன் உள்ளத்து விருப்பத்தையும் எடுத்துரைத்து விரைவில் தலைவியை திருமணம் செய்து கொள்க என வேண்டினாள்.

விலங்கு ஓரார் மெய் ஓர்ப்பின் இவள் வாழாள், இவள் அன்றிப்
புலம் புகழ் ஒருவ யானும் வாழேன்’
அதனால் பொதி அவிழ் வைகறை வந்து நீ குறை கூறி,
வதுவை அயர்தல் வேண்டுவல்’ ஆங்குப்
புதுவை போலும் நின் வரவும், இவள்
வதுவை நாண் ஒடுக்கமும் காண்குவல் யானே.

(கலி. 52 : 20-25)

பலரும் பாராட்டும் சிறந்த அறிவினை உடையவனே (தலைவன்) ஊரார் இவளது (தலைவி) களவொழுக்கம் அறிந்தார் எனில் இவள் உயிர் வாழ மாட்டாள். இவளை இழந்து நானும் உயிர் வாழ மாட்டேன். அதனால் நாளை விடியற் காலத்தே வந்து நின் செயலைப் பலருக்கு அறியக் கூறி இவளை மணந்து கொள். புதியவனைப் போல நீ வரும் காட்சியினையும் திருமணக் கோலத்தில் நாணத்தால் இவள் ஒடுங்கி நிற்கும் காட்சியையும் நான் காண வேண்டும் என்று தோழி தலைவனை நெறிப்படுத்தினாள்.

முடிவுரை

உளவியல் என்பது மனிதனை ஆராயும் அறிவியலாகும். ஆன்மாவில் தொடங்கிய உளவியல் ஆய்வு, மனம், நடத்தை, நனவு, நனவிலி போன்ற ஆய்வுகளாக பரிணமித்துள்ளன. மனித எண்ணங்களையும் நடத்தைகளையும் ஆராய்வதே உளவியலாக தற்கால சூழலில் காணமுடிகின்து. களவில் ஒருவனை விரும்பிய தலைவி பின்னர் வேறொருவனை மணக்கும் பழக்கம் பண்டையத் தமிழ் மக்களிடம் காணப்படவில்லை. தலைவியின் உள்ள முறிவு, உள்ளப் போராட்டம் மிக்க வாழ்வு சூழல்களில் சினம், அச்சம், கவலை ஆகிய உள்ளக்கிளர்ச்சிகள் தோன்றுவதையும், உள்ள அழுத்தத்தையும் காணமுடிகின்றது. தலைவி, தோழி, செவிலி, பரத்தை, காதற்பரத்தை ஆகியோரின் மனஉணர்வுகள் மற்றும் அவர்களின் உளவியல் செயல்பாடுகளை கூற்றுக்களின் வழி வெளிக்காட்டப்படுகின்றது. தற்கால மகளிர் வாழ்வியல் முறைகளை நெறிகளோடு மேற்கொள்வதற்கு சங்ககால மகளிர் சான்றாக அமைகின்றனர். மனப்போராட்டங்களைஎதிர்நோக்கும்வழிமுறைகளையும்அதற்கானதீர்வுகளையும்கலித்தொகை மகளிர் பாடல்கள் வழி தற்கால மகளிர்க்கு எடுத்துரைக்கப்படுகிறது. உள்ளப் போராட்டத்தால் மனஇறுக்கம் அடையும்போது தோழியின் ஆறுதல் வார்த்தைகள் அதற்குத் தீர்வாக அமைகின்றனதலைவி, தலைவனின் பிரிவால் வருந்தி, தனித்துப் புலம்பும் போது அச்சம், அவலம், மனமுறிவு போன்ற உணர்வுகளின் வெளிப்பாடாக விளங்குகின்றாள். தலைவியின் உணர்வுகள் எல்லை கடந்து போகும்போது அவளின் உணர்வு வெளிப்பாட்டிற்கு அஃறிணைப் பொருள்களை விளித்துப் பேசித் தன் மனதிற்கு ஆறுதல் தேடுகிறாள்.

மேலாய்வு களங்கள்

- ✓ உளவியல் நோக்கில் சங்கத் தலைவனின் மாண்புகள்
- ✓ உளவியல் நோக்கில் சங்க மகளிரும் இக்கால மகளிரும்
- ✓ தொல்காப்பிய நோக்கில் சங்க மகளிரின் வாழ்வியல்
- ✓ மெய்யியல் நோக்கில் சங்க மகளிரின் வாழ்வியல்
- ✓ மெய்ப்பாடுகளின் வழி கலித்தொகை மகளிரின் நிலம்சார் மாண்புகள்

ஆய்வுக் கட்டுரைகள்

வ.எண்	**கட்டுரைத்தலைப்பு**	**ஆய்விதழ்**	**ஆண்டு**
1	கலித்தொகையில் இயற்கை	தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்	தொகுதி – 2 ஜனவரி - 2024 ப.எண் : 190 - 201
2	உளவியல் நோக்கில் இலக்கண மெயடப்பாடுகளில் கலித்தொகை மகளிர்	மணற்கேணி ஆய்விதழ்	தொகுதி – 3. ஜீலை - 2024 ப.எண் : 98 - 105